செய்தி வெளியீடு எண் : 1939 நாள் : 04.11.2022

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் எண்ணத்திற்கு உருகொடுக்கும் வகையில் மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 2022–2023– ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் 24.03.2022 அன்று நடைபெற்ற சட்ட மன்ற பேரவைக் கூட்டத் தொடரின் போது கீழ்கண்ட அறிவிப்பை வெளியிட்டார்.

**"சென்னை நந்தனம் எம்.சி.ராஜா கல்லூரி விடுதி வளாகத்தில் தற்போது காலியாக உள்ள இடத்தில் சுமார் 75,000 சதுர அடி பரப்பளவில் 6 தளங்களுடன் நவீன வசதிகளுடன் கூடிய மாணவர் விடுதி ரூ.40.00 கோடி செலவில் கட்டப்படும்"**

மேற்படி அறிவிப்பினை நிறைவேற்றும் பொருட்டு 26.09.2022 அன்று நடைபெற்ற கூட்ட நடவடிக்கை குறிப்புகளின்படி சென்னை நந்தனம் எம்.சி.ராஜா கல்லூரி விடுதியின் வளாகத்திற்குள்ளே காலியிடமாக உள்ள சுமார் 75,000 சதுர அடி பரப்பளிவில் ரூ.40.00 கோடி (ரூபாய் நாற்பது கோடி) மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் கட்டுவதற்கு ஏதுவாக தற்போது நிருவாக அனுமதி வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. **(அரசாணை (நிலை) எண்.103, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந2(1)துறை, நாள்.04.11.2022)**

தமிழக அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் நலனுக்காக தொடர்ந்து செயல்படும்.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in